# வாகரைப் பிரதேசக் கல்வி அபிவிருத்தியில் ஆசிரியர்களின் பங்களிப்பும், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களும்.

**Balasundaram Soba[1]**

[1]Department of Education and Child Care
Eastern University.

Corresponding author's e-mail: balasundramsobana@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**
இன்றைய அறிவியல் உலகில் மாற்றங்களை உள்வாங்கி செயற்படுத்தும் பங்காளிகளாக விளங்குபவர்கள் ஆசிரியர்களேயாவர். வாகரைப் பிரதேசப் பாடசாலைகளில் கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்கள் தூரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இந்த வகையில் தூரப்பிரதேச ஆசிரியர்கள் பாடசாலைகளின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் வகையிலும், இப்பிரதேசத்திலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாக வேண்டும் என்ற நோக்கத்தோடும் கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் போது எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள் என்பதை இனங்காணுவதற்கானவே மட்டக்களப்பு மாவட்டத்தின் யுத்தம், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நிலையில் கல்வியில் பின்தங்கிய நிலையிலுள்ள வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட 12 பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாகரைப் பிரதேசப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் எவ்வகையில் பாடசாலைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள், எவ்வாறான சமூகப், பொருளாதாரப், போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர், மாணவர்களின் கல்வி நிலை தொடர்ந்தும் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கான காரணங்கள் போன்றவற்றை ஆராய்ந்து கல்வியின் அவசியத்தை பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் எடுத்துக் காட்டுவதோடு ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடனும், சிறந்த சேவை மனப்பாங்குடனும் செயற்படுவதன் அவசியத்தையும் இவ்வாய்வானதுஎடுத்துக்காட்டுகின்றது. இந்த வகையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து வினாக் கொத்து, நேர்காணல், கலந்துரையாடல் போன்றவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகளிலிருந்து தீர்வாலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

Keywords - தூரப் பிரதேச ஆசிரியர்களின் பங்களிப்பு, கல்வி அபிவிருத்தி, சேவை மனப்பாங்கு, அர்ப்பணிப்பு

## Introduction

காலத்திற்கேற்ற வகையில் கல்வி இலக்குகளில் மாற்றம் ஏற்படும் போது அவற்றை நிறைவு செய்யும் நோக்கில் பாடசாலைச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் பாரிய பொறுப்பினை ஆசிரியர்கள் ஏற்க வேண்டியவர்களாகவுள்ளனர். இவ்வாசிரியர்களே பாடசாலை என்ற சமூக நிறுவனத்தின் மையச் சக்கரமாகவும் திகழ்கின்றனர். இந்நிலையில் ஆசிரியர்களின் வினையாற்றல் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளதோடு, சிறந்த சமூகத்தை உருவாக்கும் பணியாளர்களாகவும், முன்மாதிரியாகவும் செயற்பட்டு வீடு, பாடசாலைகளுக்கிடையில் சிறந்த தொடர்புகளைப் பேணுபவராகவும் திகழ வேண்டியவர்களாவர்.

கல்வி அபிவிருத்தியில் வளர்ச்சியை அதிகரிக்கும் வகையிலும், புதிய செயல் முறைமையிலான உத்திகளைக் கண்டறிந்து வழிப்படுத்துபவர்களாகவும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். மாறிவரும் சூழலுக்கேற்ப தம்மைத் தயார்ப்படுத்த முற்படும் போது ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்த வகையிலேயே தூரப் பிரதேசத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் நாளாந்தம் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். இவ்வாறான ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருவதினூடாக அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதோடு, மாணவர்களின் அடைவு, அவர்களின் கற்றற் செயற்பாடுகளிலும் முன்னேற்றத்தை கொண்டு வர முடியும். பாடசாலைகளின் அபிவிருத்திகளினூடாக நாட்டில் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்தி மாறும் உலகில் சவால்களை எதிர் கொள்ளவும் அவற்றை வெற்றிகரமாக ஆக்கிக் கொள்ளவும் வழியேற்படும்.

## Background

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலை மாணவர்கள் கற்றலில் ஆர்வமின்றிக் காணப்படல், பாடசாலைகளில் அதிகரித்த இடைவிலகல் காணப்படல், பாடசாலைக்கு தொடர்ச்சியாக வருகை தராமை, பாடசாலைகளில் பௌதீக வளப் பற்றாக்குறை, சில பாடசாலைகளில் விடுதி வசதி இருந்தும் அதற்குரிய பராமரிப்பு வசதிகள் இன்மை, கற்றல் கற்பித்தலை சிறப்பாக முன்னெடுப்பதற்குத் தேவையான கற்பித்தல் துணைச் சாதனங்கள் இல்லாமை, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் பற்றாக் குறை, பெரும்பாலான ஆசிரியர்கள் நகர்ப் பிரதேசத்திலிருந்து வருவதனால் இலகுவில் சோர்வடைவதோடு, அவர்களின் போக்குவரத்து வசதிக்கேற்ப நேரசூசி அமையாமை, போக்குவரத்து வசதியின்மை, தொழிநுட்ப வசதிகள், நூலகம் போன்ற தேடலுக்குரிய வளங்கள் இல்லாமை, பெற்றோர் கல்வி தொடர்பாக அக்கறை செலுத்தாமை, பெற்றோர்கள் பாடசாலைச் செ
சயற்பாடுகளில் பங்குபற்றாமை போன்ற பல பின்னணிகளில் இவ்வாய்வுத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலைச் செயற்பாடுகளில் சவால்களை எதிர் நோக்குவதற்குக் குடும்பப் பின்னணி, பாடசாலைப் பின்னணி, மாணவர்களின் செயற்பாடுகள், மாணவர்களின் அடைவுமட்ட வீழ்ச்சி, வறுமை, பொருளாதார நிலை, போதிய உள்ளீடுகள் இன்மை, கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் போன்றவாறான பல்வேறு பின்னணிகள் காரணமாகின்றன. இவ்வாறு பிள்ளைகளின் கல்வி பாதிப்பானது நாட்டின் அபிவிருத்தியை ஒட்டு மொத்தமாகவே பாதிப்படையச் செய்கின்றது.

## Justification of the Study

ஆசிரியர்கள் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் போது எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள், கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஆர்வமின்றிக் காணப்படுவதற்கான காரணங்கள், பெற்றோரின் பங்களிப்புக் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் போன்றவாறான பிரச்சினைகளைக் கண்டறிய இப்பிரதேசத்திற்கு இவ்வாய்வு அவசியமாகின்றது.

தற்கால நடைமுறையிலுள்ள வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர்களின் பங்கு முக்கியத்துவமுடையதாகும். பிள்ளைகளின் சிந்தனையைத் தூண்டுதல், கல்வி மூலவளங்களை ஒன்று சேர்த்தல், பிள்ளைகளின் பல்வேறு தேவைகளை கற்பித்தல் நோக்கங்களுக்கு ஏற்புடையதாக்கும் நோக்குடன் முழுக் கல்விச் சூழலையும் ஒன்றிணைக்கும் பொறுப்புடையவராக ஆசிரியர்கள் உள்ளமையினால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஆசிரியர்களின் முக்கியத்துவத்தினை புலப்படுத்த வேண்டியுள்ளது. அத்தோடு தூரப் பிரதேசத்திலிருந்து வருகை தரும் ஆசிரியர்களுக்கான வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இவ்வாய்வு அவசியமாகின்றது.

இப்பிரதேச மாணவர்களின் கல்வி நிலை தொடர்ந்தும் பின்தங்கிய நிலையிலிருப்பதனால் பெற்றோர், மாணவர், அச்சமூகத்திற்கு கல்வியின் முக்கியத்துவத்தினை புலப்படுத்தி அனைத்துப் பிளளைகளுக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவைப்பாடுள்ளது. இதனாலேயே ஒரு நாட்டின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

## Research objectives

1.தூரப்பிரதேச ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி விருத்திக்கு எந்தளவிற்குப் பங்களிப்புச் செய்கின்றனர் என்பதனை அறிதல்.

2.தூரப்பிரதேச ஆசிரியர்கள் பாடசாலைச் செயற்பாடுகளில் எதிர் நோக்கும் பிரச்சினைகளை இனங்காணுதல்.

3.ஆசிரியர்கள் தங்குவதற்குரிய விடுதி வசதிகள் எந்தளவிற்கு உள்ளன என்பதனை அறிதல்.

4.மாணவர்கள் கல்வியில் பின்தங்கியிருப்பதற்கான காரணங்களைக் கண்டறிதல்.

5.ஆசிரியர், மாணவர்களின் பிரச்சினைகளுக்கான ஆலோசனைகளை முன்வைத்து தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

## Statement of the problem

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலை ஆசிரியர்களில் பெரும்பாலான ஆசிரியர்கள் நகர் பிரதேசத்திலிருந்து வருகை தருபவர்களாகவே உள்ளனர். போக்குவரத்திலே அதிகளவு நேரத்தைச் செலவழிக்க வேண்டியுள்ளதனால் பாடசாலையின் இணைபாடச் செயற்பாடுகளில் அக்கறையின்றிக் காணப்படல். அதாவது சில ஆசிரியர்கள் 100 மஅ க்கும் அதிகமாக தொலைவிலிருந்து வருகை தருபவர்களாகக் காணப்படுகின்றனர்.

பாடசாலையில் கற்பித்தல் துணைச் சாதனங்கள், ஆய்வு கூட வசதிகள், ஆய்வு கூடப் பாவனைக்குரிய பொருட்கள், தொழிநுட்ப வசதிகள், சங்கீத அறை, விளையாட்டு மைதானம், போன்றன இல்லாமையினால் சிறந்த கற்பித்தல் முறைகளையும், நுட்பங்களையும் கையாள முடியாதுள்ளமை.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பாடசாலைகள் காணப்படல், ஆசிரியர் அறை, குடிநீர் வசதி, கழிவறைகள், வாகன தரிப்பிடம், சிற்றுண்டிச்சாலைகள் போன்ற வசதிகள் இல்லாமையினால் தூரப் பிரதேச ஆசிரியர்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

பெற்றோர், ஆசிரியர்களுக்கிடையிலான தொடர்பு குறைவாகக் காணப்படுவதோடு, பெற்றோர்கள் கல்வி பற்றிய விழிப்புடன் செயற்படாமையினால் பெற்றோர்களின் ஒத்துழைப்பை ஆசிரியர்களால் பெற முடியாதுள்ளது.
மாணவர்கள் வீட்டு வேலைகளை உரிய தினங்களில் ஒப்படைக்காமல் கற்றலில் ஒரு அசமந்தப் போக்கையே வெளிப்படுத்துதல்.

பருவ காலத் தொழில்களின் போது மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்காமையினால் உரிய காலத்தில் பாடத்திட்டத்தை முடிக்க முடியாதுள்ளதுடன் சிறப்பான முறையில் கற்பித்தலையும் மேற்கொள்ள முடியாதுள்ளது.

மாணவர்கள் கற்றலில் ஆர்வமின்றிக் காணப்படுவதோடு, பெரும்பாலான மாணவர்கள் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் காணப்படல். இதனால் அடைவு மட்டம் குறைந்தளவே காணப்படுகின்றது.

## Literature Review

இலக்கிய மீளாய்வானது ஆய்வுப் பிரச்சினை சார்பான எண்ணக்கருவைப் புதிதாக வடிவமைத்துக் கூர்மைப்படுத்துவதற்கு உதவுகின்றது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக இலக்கிய மீளாய்வுச் செயற்பாடானது பல்வேறு தலைப்புக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.ஆசிரியர் என்பவர்கள் எவ்வாறான இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும், இலங்கையில் ஆசிரியர் தொழில் பெறும் முக்கியத்துவம், ஆசிரியர்களின் வாண்மைத்துவம், ஆசிரியர்களின் வகிபங்கு, வினைத்திறனான கற்பித்தலில் ஆசிரியர்களின் பங்களிப்பு, ஆசிரியர்களின் அறைகூவல்களும் பிரச்சினைகளும், வகுப்பறை மட்டப் பிரச்சினைகள், பௌதீகப் பிரச்சினைகள், தனிப்பட்ட பிரச்சினைகள், போக்குவரத்து, கஸ்ரப் பிரதேசம், உளவியல் தாக்கம் போன்ற பல்வேறு விடயங்கள் யாவும் சஞ்சிகைகள், வாழ்வியற்களஞ்சியம் கட்டுரைகள்,குறிப்புக்கள், சுற்றறிக்கைகள், ஆவணங்கள்மற்றும் அவை தொடர்பான நூல்கள் போன்றவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வகையில் காலமாற்றத்திற்கேற்ப ஆசிரியர்களின் வினையாற்றல் அதிகரிக்கப்பட வேண்டும் என கூறப்படும் அதேவேளை ஆசிரியர்கள் அதற்கேற்ப தயார்படுத்தப்பட வேண்டிய தேவையும் உள்ளது. இவ்வாறானடிப்படையில் உருவாக்கப்படுபவர்களே உண்மையான ஆசிரியர்கள் என கருதப்படுகின்றார்கள். (கருணாநிதி.மா, 2008).

ஒரு மனிதனால் செய்யக் கூடிய கடினமானதும், சவாலானதுமான தொழில் ஆசிரியர் தொழிலாகும். ஒரு ஆசிரியர் பல்வேறு கதாபாத்திரங்களாக மாறுகின்றார்கள். நல்ல நண்பன், நெறியான், ஆலோசகர் என ஆசிரியரையே வரைவிலக்கணப்படுத்திக் கொண்டு போகலாம். (http;www. helum. com)

கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களிடம் இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. கற்பித்தலுடனான விருப்பம் (willingness in teaching)இ கற்பித்தலுடனான ஈடுபாடு (involvement inteaching) இவை சாதகமான நிலையில் காணப்படும் போதே கற்பித்தலானது வெற்றிகரமான கற்பித்தலாக அமையும்.

இப்பிரதேசத்தைப் பொறுத்த வரையில் ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் அதிகமாகவே காணப்படுகின்றது. ஆசிரியர்கள் நாளாந்தம் கடமைக்குச் செல்கின்ற பொழுது நேர விடயத்திலும், உணவு விடயத்திலும் அக்கறையற்ற தன்மை ஏற்பட வாய்ப்புண்டு. அதிலும் தூர இடத்தில் கடமை புரியும் ஆசிரியை என்றால் காலை 6 மணிக்குப் புறப்பட்டு பிற்பகல் 6 மணிக்கு வீடு வந்து சேரும் நிலைமை குடும்ப ரீதியான பிரச்சினைகளையும் விரிசல்களையும் ஏற்படுத்தும். (மதுசூதன். தெ, 2007)

## Research Methodology and Data Analysis

ஆய்வு முறைமை சிறப்பாகக் காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத்தன்மையானதாக காணப்படும்.(சின்னத்தம்பி.க, 2007) இந்த வகையில் வாகரைப் பிரதேச கல்வி அபிவிருத்தியில் தூரப் பிரதேச ஆசிரியர்களின் பங்களிப்பும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இவ்வாய்வானது அளவைநிலை ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அளவை நிலை ஆய்வே தற்கால நிகழ்கால உண்மை நிலைகளை ஆராய்ந்து சரியான தரவு, தகவல்களை அளிக்கும் முறையாக அமைந்துள்ளது.

**ஆய்வின் குடித்தொகையும், மாதிரியும்.**

இப்பிரதேச கல்வி அவிபிருத்திக்குக் கோட்டக்கல்வியதிகாரி, அதிபர்கள், தூரப் பிரதேச ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோர் பங்களிப்புச் செய்கின்ற வேளையில் எதிர் கொள்ளப்படும் பிரச்சினைகள் தனித் தனியாக நோக்கி உண்மை நிலையை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. ஆய்வாளரால் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரதேசமானது 20 பாடசாலைகளைக் கொண்டுள்ள போதிலும் வெளிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை அதிகமாகக் கொண்டு காணப்பட்ட 12 பாடசாலைகள் ஆய்வு மதிரியாகத் தெரிவு செய்யப்பட்டன.

Table 3.1 School chosen for research

| பாடசாலையின் பெயர் | வகை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | வெளிப்பிரதேச ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| Bt/Kk/Kayankerny Saraswathy Vidyalayam | **II** | 17 | 17 |
| Bt/Kk/Mankerny R.C.T.M.S | **II** | 26 | 26 |
| Bt/Kk/Panichankerny Thirumagal Vidyalayam | **II** | 19 | 19 |
| Bt/Kk/Vaddawan Kalaimagal Vidyalayam | **II** | 13 | 13 |
| Bt/Kk/Alankulam G.T.M.S. | **II** | 12 | 12 |
| Bt/Kk/Mathurankernykulam G.T.M.S | **II** | 8 | 7 |
| Bt/Kk/Palchenai G.T.M.S | **1C** | 21 | 19 |
| Bt/Kk/Kathiravely Vikneswara Vidyalayam | **1C** | 35 | 31 |
| Bt/Kk/Vammivaddavan Vidyalayam | **II** | 22 | 18 |
| Bt/Kk/Vakarai Maha Vidyalayam | **1C** | 37 | 29 |
| Bt/Kk/Kandalady Arunthathy Vidyalayam | **III** | 7 | 7 |
| Bt/Kk/Ralodai Thiruvalluvar Vidyalayam | **III** | 4 | 4 |

**Sourced from: Zonal Education Office, Valaichenai**.

தெரிவு செய்யப்பட்ட 12 பாடசாலைகளும் ஆய்வுக் குடித்தொகையில் உட்படுவதுடன் மாதிரிகளாக 12 பாடசாலைகளின் அதிபர்களும், 97வெளிப்பிரதேச ஆசிரியர்கள், கோட்டக் கல்விப்பணிப்பாளர், தரம் 11 சேர்ந்த மாணவர்கள் 112, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் 24 போன்றோர் மாதிரிகளாகத் தெரிவாகினர்.

அட்டவனை 3.2 மாதிரித் தெரிவு முறைகள்

| **குடித்தொகை** | **எண்ணிக்கை** | **மாதிரி முறை** | **விதி** | **மாதிரி** |
|---|---|---|---|---|
| ஆதிபர்கள் | 12 | - | - | 12 |
| ஆசிரியர்கள் | 202 | ஏளிய எழுமாற்று | 2.1 | 97 |
| மாணவர்கள் | 361 | ஏளிய எழுமாற்று | 3.1 | 112 |
| பா.அ.சங்க உறுப்பினர்கள் | 24 | - | - | 24 |

**தரவு சேகரித்தல் கருவிகளும், நுட்பங்களும்**
பொருத்தமான கருவிகளை தரவு சேகரிக்கத் தெரிவு செய்து பயன்படுத்தல் ஆய்வுச் செயற்பாட்டில் முக்கியமானதாகும். இங்கு 1. வினாக்கொதது 2.நேர்காணல் 3. கலந்துரையாடல் போன்ற ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.இவ்வாய்வின் தரவுப் பகுப்பாய்வு முறைகளாக அளவறிசார் முறையும், பண்பறிசார் முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, பகுப்பாய்வுக்கு உதவியாகக் கணனி மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டதன் மூலம் நேர்த்தியான நம்பகமான பகுப்பாய்வாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## Data Analysis

வாகரைப் பிரதேசக் கல்வி அபிவிருத்தியில் தூரப் பிரதேச ஆசிரியர்களின் பங்களிப்பும், அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் அறிந்து கொள்ளும் பொருட்டு பல்வேறுபட்ட விடயங்கள் பல்வேறு வழிகளிலும் வினவப்பட்டன. இந்த வகையில் ஆசிரியர்களின் பங்களிப்புகள், அவர்கள் எதிர் கொள்ளும் சவால்கள், மாணவர்களின் கல்வி நிலை பின்தங்கியிருப்பதற்கான காரணங்கள் போன்றவற்றைக் கண்டறியும் நோக்குடன் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி அதிபர்களின் கருத்துக்களுடாக அறியப்பட்ட விடயங்களாவனஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 75% ஆசிரியர்கள் பாடசாலை நேரத்திற்குச் சமூகமளிக்கின்ற போதிலும் 25% ஆசிரியர்களால் பாடசாலை நேரத்திற்குச் சமூகமளிக்க முடியாதுள்ளதாக அறியப்பட்டுள்ளது.





Fig . 4.1

இவ்வகையில் ஆசிரியர்களால் நேரத்திற்குச் சமூகமளிக்க முடியாமைக்கான காரணங்களாக பெரும்பாலான ஆசிரியர்கள் வெளிப் பிரதேசத்திலிருந்து வருகை தருகின்றமையினால் அதிகளவு நேரத்தை பயணங்களில் செலவு செய்யும் நிலை காணப்படுவதாகவும், போக்குவரத்து பாரிய சவாலாக அமைந்து விடுவதாகவும் அதிபர்கள் இனங்காட்டியுள்ளனர்.

இதே போலவே தூரப் பிரதேச ஆசிரியர்கள் இணைபாடச் செயற்பாடுகளில் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராக இருக்கின்ற போதிலும் 67% ஆசிரியர்களால் மட்டுமே பூரணமாக ஒத்துழைப்பு வழங்க முடிவதாகவும் 33% ஆசிரியர்களால் பூரணமாக ஒத்துழைப்பு வழங்க முடியாதுள்ளதாகவும் அறியமுடிகின்றது. ஏனெனில் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிற்பாடு போக்குவரத்து வசதி மிகவும் குறைவாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





Fig. 4.2

இதே போல் தூரப் பிரதேச ஆசிரியர்களின் கருத்துக்களினூடாக அறியப்பட்ட விடயங்களாவன மாணவர்களில் 88% மாணவர்கள் வீட்டு வேலைகளை உரிய தினங்களில் ஒப்படைப்பதில்லை எனவும் கற்பித்த விடயங்களை மீட்கின்ற சந்தர்ப்பங்களில் கூடியளவு மறந்த நிலையில் காணப்படுவதாகவும் ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.





Fig. 4.3

இந்நிலையில் மாணவர்களின் கல்வி நிலை பின்தங்கியிருப்பதற்கான காரணங்களில் 70% வீட்டுச் சூழல் காரணி செல்வாக்குச் செலுத்துவதாகவும், 30% பாடசாலைச் சூழல் காரணி செல்வாக்குச் செலுத்துவதாகவும் அறிய முடிந்துள்ளது.





Fig. 4.4

மாணவர்களின் கல்வி நிலை பின்தங்கியிருப்பதற்கான வீட்டுச் சூழல் காரணங்களாக, பிள்ளைகள் வீடுகளில் கற்பதற்கான அடிப்படை வசதிகள், சூழல் போன்றன பொருத்தமாக அமையாமை, பெற்றோருக்குக் கல்வி பற்றிய போதிய விழிப்புணர்வு இன்மை போன்றவாறான காரணங்களையும், அதே போல் பாடசாலைக் காரணிகளாக கற்றல் கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்வதற்கு போதுமானளவு பௌதீக வளங்கள், கற்பித்தற் துணைச் சாதனங்கள் போன்றன இல்லாதுள்ளமையையும் ஆசிரியர்கள் இனங்காட்டியுள்ளனர்.

இவ்வாறே ஆசிரியர்களின் செயற்பாடுகள் குறித்து மாணவர்களிடன் அறியப்பட்ட விடயங்களாவன தூரப்பிரதேசத்திலிருந்து வருகை தரும் ஆசிரியர்களில் 80% ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தின் பிற்பாடு மேலதீக வகுப்புக்களை நடத்துவதாக அறிய முடிகின்றது.





Fig. 4.5

அதே வேளை ஆசிரியர்களின் கற்பித்தற் செயற்பாடுகள் தொடர்பாக குறிப்பிடுகையில் கற்பித்தல் திருப்திகரமாக இருப்பதாக 89% மாணவர்கள் தமது கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளனர்.





Fig. 4.6

இவ்வாறேபாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் கருத்துக்களினூடாக அறியப்பட்ட விடயங்களாவன தூரப் பிரதேச ஆசிரியர்கள் பாடசாலைச் செயற்பாடுகளில் அக்கறையுடன் செயற்படுவதாக 75% பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறே பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையில் மாணவர்களில் 37% பெற்றோரில் குறைந்த பட்சம் தாய், தந்தை ஒருவரின் பராமரிப்பு கிடைக்காமலுள்ளமையைக் காட்டியுள்ளனர்.
அட்டனை 4.1 பெற்றோருடன் பிள்ளைகள் வாழாமைக்கான காரணங்கள்.

| |
|---|
| யுத்தத்தின் காரணமாக தந்தையை இழந்திருத்தல் |
| பெற்றோர் பிரிந்திருத்தல் |
| பேற்றோர் வெளிநாடு சென்றிருத்தல் |

## Research findings and recommendations

வாகரைப் பிரதேசத்தில் கற்பிக்கும் அனேகமான ஆசிரியர்கள் தூரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதனால் முழுமையாகப் பாடசாலைச் செயற்பாடுகளில் ஈடுபட நேரம் ஒரு பிரச்சினையாகவே உள்ளது. இவர்களில் பல ஆசிரியர்கள் 100kmகும்அப்பாலிருந்து நாளாந்தம் வருகை தருபவர்களாக இருப்பதால் போக்குவரத்துக்காக தினமும் 5-6 மணித்தியாலங்களை செலவழிக்க நேரிடுவதனால் பாடசாலையின் இணைபாடச் செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபட முடியாதவர்களாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
ஆசிரியர்கள் தூர இடங்களிலிருந்து வருவதினாலும் குறிப்பிட்ட நேரத்திற்கு வாகனங்கள் கிடைக்காத காரணத்தினாலும் அதிகளவான நேரத்தை வீதிகளில் செலவு செய்வதால் அசதி, உடல் களைப்பு, சமூகப் பொருளாதார ரீதியான பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் மாணவர்களின் அடைவு மட்ட வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் பெரும் பங்காற்றுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலை நேரம் முடிந்ததின் பிற்பாடு ஒவ்வொரு ஆசிரியர்களும் ஒவ்வொரு நாள் கடமையாற்றும் வகையில் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது சிறப்பானதொரு விடயமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக தரம் 5, தரம் 11 மாணவர்களுக்கான பின்னேர வகுப்புக்கள் கடந்த வருடத்திலிருந்து நடைபெறுகின்றமை ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மனப்பாங்கையே வெளிப்படுத்துகின்றது.

இப்பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் தங்கள் செயற்பாடுகளை வினைத்திறனான முறையில் முன்னெடுப்பதற்கேற்ப பாடசாலைச் சூழல் காணப்படாத போதிலும், கற்பித்தலைச் சிறப்பாக மெற்கொள்ள ஆய்வு கூட வசதிகள், கற்பித்தல் துணைசாதனங்கள், நூலகம், சங்கீத அறை, போன்றவாறான குறைபாடுகள் மத்திலிலும் ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையிலும் பாடசாலைகளின் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஆசிரியர்கள் இயன்றளவு பங்கு கொள்வதனையும், தமிழ்த்தினப்போட்டி, சித்திரம், சங்கீதம் போன்ற போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதனையும் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட பெற்றோர் கல்வியறிவு குறைந்தவர்களாக இருப்பதனால் கல்வியினால் பெற்றுக் கொள்ளும் பயனை அறியாதவர்களாகக் காணப்படுகின்றனர். வீடுகளில் பிள்ளைகள் கற்கும் விடயங்களைச் சரியா, பிழையா என பார்ப்பதற்குக் கூட தெரியாய நிலையில் பெற்றோர்கள் காணப்படுவதனால் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்தாத நிலையில் ஆசிரியர்களே பிள்ளைகளின் கல்வி விருத்திக்கு முக்கிய பங்காளிகளாகக் காணப்படுகின்றார்கள்.

பிள்ளைகள் வசிக்கும் வீடுகளில் கற்பதற்கு வாய்ப்பான சூழல் காணப்படாமை, அடிப்படை வசதிகள் போதாமை, மின்சாரம், தளபாட வசதிகள் இல்லாமை, வீட்டில் கல்வி கற்ற முன்மாதிரிகள் இல்லாமை போன்றவாறான காரணங்களினால் பிள்ளைகளின் அடைவு மட்டம் தொடர்ந்தும் தாழ் நிலையில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
பாடசாலைச் சூழலுடன் பெற்றோர்கள் இணைந்து செல்லல் குறைவாகக் காணப்படுவதோடு, அதிபர், ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறைவாக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் தங்களின் அறியாமை, வறுமை போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் மாணவர்களின் கல்வியில் அக்கறை செலுத்துவது மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இளவயதுத் திருமணங்கள் அதிகமாகக் காணப்படும் அதேவேளை பெற்றோர்கள் பிள்ளைகளைத் தொழிலுக்கு அழைத்துச் செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது.

மாணவர்களில் பெரும்பாலானோர் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் காணப்படுவதால் அவர்களை மேலதிக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்த முடியாத நிலையில் அவர்களுக்கு வழங்கப்படும் மேலதிக கற்றல் கற்பித்தல் செயற்பாடானது கல்விச் சுமையாகவே காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. மாணவர்கள் கற்கும் தரங்களுக்கு ஏற்ற வகையில் இல்லாமல் மாணவர்களின் கல்வி நிலை குறைவாகக் காணப்படுகின்றமை கவலைக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. இவ்வாறாக பல்வேறு சவால்கள் கண்டறியப்பட்டன.

## Suggestions

ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படும் போது எதிர் நோக்கும் சவால்களை வெளிக் கொண்டு வருவதினூடாக ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடிவதோடு, மாணவர்களை கல்வியில் அக்கறையுடன் செயற்படுவதற்கு வழிகாட்டவும் முடியும்.

ஆசிரியர்கள் தங்களால் இயன்ற வரையில் தங்கியிருந்து கற்பித்தலை மேற்கொள்ளுதல் வேண்டும். அப்போது தான் அதிகளவு நேரத்தை மாணவர்களுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட முடிவதுடன் கற்பிக்கும் போது மாணவர்களின் பின்னணியை இனங்கண்டு கற்பிக்கவும் முடியும்.

தூரப் பிரதேச ஆசிரியர்களே இப்பிரதேசப் பாடசாலைகளில் கற்பிப்பதனால் தங்குமிட வசதிகளை சரியான முறையில் ஏற்படுத்திக் கொடுப்பதோடு, அதிக நேரம் வீதிகளில் போக்குவரத்துக்காகக் காத்திருக்காமல் இலகுவான முறையில் போக்குவரத்து செய்வதற்கு வசதி வாய்ப்புக்களை அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

கஸ்ர, அதிகஸ்ரப் பிரதேசத்தில் கஸ்ரத்தின் மத்தியில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு உளத்திருப்தியை ஏற்படுத்தும் வகையில் ஊக்குவிப்புக்களை வழங்குதல் வேண்டும்.
தூரம் பாரிய பிரச்சினையாக இருப்பதனால் இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது அந்த கல்வி வலயத்தையும் கவனத்திற் கொண்டு இடமாற்றம் செய்வது பொருத்தமாக இருக்கும்.

பெற்றோர் மத்தியில் கல்வி கற்பதிலுள்ள நன்மைகளை எடுத்துக் கூறி பெற்றோர்களின் மேலதிக செலவைக் கட்டுப்படுத்த ஆலோசனைகள் வழங்குவதுடன், பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை உள்ளவர்களாக இருப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைத்தல்.

மாணவர்களின் சுய கற்றலை அதிகரிக்கும் வகையிலும், கல்வி நாட்டத்தை அதிகரிக்கும் வகையிலும் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர்கள் இணைந்த வகையில் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.
மாணவர்களுக்கு ஆரம்ப வகுப்புக்களிலிருந்து மொழித்திறன் விருத்திக்கான பிரத்தியக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

## Conclusion

உலகில் எந்தவொரு சமூகமும் கல்வி அபிவிருத்தியில் உச்சக் கட்டத்தினை எட்டிப் பிடிப்பதற்கே முயற்கிக்கின்றன. இன்றைய நிலையில் கல்வியில் வளர்ச்சியடைவதற்கு ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றது. இந்த வகையில் கல்வியில் பின்தங்கிய நிலையில் காணப்படும் வாகரைப் பிரதேசத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கல்வி வளர்ச்சிக்கான பங்காற்றும் போது பல்வேறு விதமான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

இப்பிரதேசப் பெற்றோர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாக இருப்பதனாலும் பொருளாதாரம் பின்தங்கிய நிலையில் வறுமை காரணமாகவும் தங்கள் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியைப் தொடர்ச்சியாகப் பெற வேண்டும் என்பதில் அக்கறையற்ற நிலையிலுள்ளதனை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட பல செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றது. இதனால் மாணவர்கள் பாடசாலைக்கு தொடர்ச்சியாக சமூகமளிக்காமல் விடுவதனாலும், வீட்டு வேலைகளை உரிய தினத்தில் பூர்த்தி செய்யாமல் பாடசாலைக்கு வருவதனாலும் ஆசிரியர்களால் சிறப்பான கற்றல் கற்பித்தலை மேற்கொண்டு உரிய காலத்தினுள் பாடத்திட்டத்தை முடிப்பதில் பெரும் சவாலை எதிர் நோக்குகின்றனர்.

பெற்றோர்கள் கல்வியில் அக்கறையற்றவர்களாக இருப்பதனால் பிள்ளைக்கு அறிவுரை வழங்க வேண்டிய முக்கிய பொறுப்புள்ளவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள். இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் நகர்ப்புறத்திலிருந்து வருவதனால் நேரம் பாரிய பிரச்சினையாக இருக்கின்ற போதிலும் மாணவர்களின் நலனைப் பேணுதல், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தல், பாடசாலையின் இணைபாடச் செயற்பாடுகளில் பங்கெடுத்தல், மாணவர்களை போட்டிகளுக்குத் தயார்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளையும் நிறைவேற்றுபவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள். இவ்வாறு அர்ப்பணிப்புடன் செயலாற்றும் போது பாடசாலையில் கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்ள போதியளவு வளங்கள் இல்லாமை, குடிநீர் வசதி இல்லாமை போன்றவற்றாலும் தூரப் பிரதேச ஆசிரியர்கள் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றன.

இந்த வகையில் பெற்றோர்கள் கல்வி பற்றிய முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதோடு, பாடசாலைக்குப் போதுமான வளங்களையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். வறுமை காரணமாக பாடசாலைக்கு வராத பிள்ளைகளின் தேவைகளை இனங்கண்டு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொடுப்பதோடு, நகர்ப் பிரதேச ஆசிரியர்களின் போக்குவரத்து வசதிகளை இலகுபடுத்துவதன் மூலம் ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பை பாடசாலை பெற்றுக் கொள்வதோடு, மாணவர்களின் கல்வியையும் விருத்தி செய்வதன் மூலம் நாட்டின் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

## References

சந்திரசேகரம்.சோ., 1995,“புதிய நூற்றாண்டுக்கான கல்வி”, தர்னா பதிப்பகம், கொழும்பு 11.

சந்திசேகரம்.சோ., 1996,“கல்விச் செயற்பாட்டில் புதிய செல்நெறிகள்”, கவிதா பதிப்பகம்.

சந்தானம்.எஸ், கணபதி.வி, 1999,“கல்விசார் அறை கூவல்கள்”, சாந்தா பப்பிளிசர்ஸ், சென்னை 600014.

சின்னத்தம்பி.க, 1999,“அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும்”, ஜெயா பதிப்பகம், கொழும்பு.

நு.மான். எம், 2002,“ஆரம்ப இடைநிலை வகுப்புக்களில் தமிழ் மொழி கற்பித்தல்”, கொழும்பு தமிழ்ச் சங்கம்.

கருணாநிதி.மா, 2008,“கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள்”, சேமமடு பதிப்பகம், கொழும்பு 11.

கினிகே.எல், 2008,“புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக் கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும்”, கல்வி வாண்மைத் தேர்ச்சி மையம்.

ஜெயராசா.சபா, 2008,“கற்றல் உளவியல்”, சேமமடு பொத்தகசாலை, கொழும்பு 11

சின்னத்தம்பி.மா, 2005 நெருக்கடிக்குட்படும் பிரதேசங்களில் ஆசிரியர் வகிபங்கு

கருணாநிதி.மா, அகவிழி 2007 பாடசாலை மட்ட கணிப்பீட்டை நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்

மதிசூதனன்.தெ, அகவிழி 2007, ஆசிரியத்துவத்துவமும் பால்நிலை அறிகையும

லோகேஸ்வரன்.ஆர், அகவிழி 2007, ஆசிரியத்துவத்தின் வெற்றிக்கு உளவியலின் பங்கு.

ஜெயராசா.சபா, அகவிழி 2007, மாணவர்களின் அடைவுமட்டங்கள் பற்றிய மீளாய்வு.

# மியன்மாரில் ஜனநாயகப் படுத்தலில் ஆங் சாங் சூகியின் பங்களிப்பு

**Vijayarasa Sathana**[1]

[1]Department of Political Science, University of Jaffna.

Corresponding author's e-mail: sathanarasa@yahoo.com

**ஆய்வின் சுருக்கம்**

மியன்மார் மிக நீண்டகாலம் இராணுவ கட்டமைப்பின் கீழ் வளர்த்தெடுக்கப்பட்டு வந்தது. அவ்வாறான இராணுவ அரசியல் வாதம் மேலோங்கிய நிலையில் சிவிலியங்களின் வாழ்க்கை முறைகள் பெரிதும் அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டும் இராணுவ மனோநிலை மேலோங்கிய நிலையில் வாழ்க்கை முறைமைகள் வடிவமைக்கப்பட்டும் வந்திருந்தமையினை மியன்மாரின் நவீன அரசியல் வரலாறு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இந் நிலையில் பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் இராணுவ நடைமுறையின் பின்னணியில் கட்டுப்படுத்தப்பட்டு வந்தமையினால் சிவிலியன்களது ஜனநாயக உணர்வுகளுக்கு மதிப்பளிக்க முடியாத ஓர் அரசியல் சூழல் தோற்றம் பெற்றிருந்தது. இத்தகைய ஓர் அரசியல் சூழலை மிகவும் மன உறுதியுடன் எதிர் கொண்டு இராணுவ ஆட்சியாளர்களின் கொடூர தன்மையினை ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தி தனது ஆளுமையின் பலத்தை அதிகரிக்க செய்து இன்று மியன்மாரில் ஜனநாயக அடிப்படையிலான மக்களது சிவில் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு சிறப்பு உதாரணமாக விளங்கிய ஆங் சாங் சூகியினது அரசியல் பங்களிப்பை ஆராய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. அவரது பரந்த பங்களிப்பின் மத்தியில் ஜனநாயகத்தை சர்வதேச ஒத்துழைப்புடன் எவ்வாறு மியன்மாரில் மீண்டும் ஸ்தாபித்தார் என்பதனை ஆராய்வதாகவே இக் கட்டுரை அமைந்துள்ளது. இங்கு மூன்று முக்கியமான அலகுகள் எடுத்தாளப்படுகின்றன.

1. சூகி எதிர்கொண்ட இராணுவ அடக்குமுறையின் தன்மைகள் .
2. சர்வதேசத்திற்கு அந்த நிலைமைகள் எடுத்துக்காட்டப்பட்ட விதம் .
3. ஒரு பாரளுமன்ற ஜனநாயக வாதியாக அவர் பலப்படுத்திக்கொண்ட விதம்.

இந்த மூன்று அடிப்படைகளில் இருந்தே ஆங் சாங் சூகியின் ஜனநாயக மயப்படுத்துக்கான பங்களிப்பினை ஆராய விளைகின்றேன்.

**பிரதான சொற்கள்** : ஜனநாயகம், இராணுவம், சர்வதேசம், ஆங் சாங் சூகி, அரசியல், உணர்வுகள்.

**ஆய்வின் அறிமுகம்**

உலக வரலாற்றிலே ஜனநாயகத்துக்காக சிறைவாசம் அனுபவித்த நெல்சன் மண்டலோவுக்குப் பின்னர் அரசியலுக்காக ஜனநாயக உரிமைக்காக சிறைவாசம் அனுபவித்த ஒருவர் என்றால் அது ஆங் சாங் சூகி மட்டும்தான். வேறு சிலருக்கு வாழ்க்கையில் போராட்டம், சிலருக்கு வாழ்க்கையே போராட்டமாக இருக்கும். அத்தகைய ஒருவர்தான் ஆங் சாங் சூகி.

மியன்மாரின் ஒப்பற்ற பெருந்தலைவி இந்த நூற்றாண்டின் மகத்தான வீராங்கனை எனப் புகழப்படும் சூகிக்கு 1991ல் நோபல் பரிசு வழுங்கப்பட்டது. அப்பரிசினை வாங்க இவர் செல்லவில்லை. ஏனெனில் அந்நேரம் சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருந்தார். இவரது இரு மகன்களும் சென்றே நோபல் பரிசினைப் பெற்றுக்கொண்டனர். இவ்வாறு இவரை சிறையில் அடைத்தது அந்நாட்டு அரசாங்கமே அப்படி என்ன குற்றத்தினை இவர் இழைத்து விட்டார் வேறொன்றுமில்லை வன்முறையற்ற அமெரிக்க மனித உரிமைத் தலைவர் மார்டின் லூதர் கிங் இந்தியாவின் காந்தியின் பாதையைத் தொடர்ந்த மியன்மாரின் இராணுவ ஆட்சிக்கு எதிராக ஜனநாயப் பாதையில் போராடியமை ஆகும்.

நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட பர்மாவின் கிழக்கில் சீனா, இலாலோசு, தாய்லாந்து ஆகிய நாடுகளும் மேற்கில் இந்தியப் பெருங்கடல், வங்களாதேசம், இந்தியா போன்றனவும் தெற்கில் அந்தமான கடலும் காணப்படுகிறது. இங்கு சான், சச்சின், காயா, கரன்சின், பர்மன் ஆகிய இனங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் பர்மியர் கி.பி 16ம் நூற்றாண்டுவரை பலம் வாய்ந்தவர்களாகக் காணப்பட்டனர். எனினும் கி.பி. 19ம் நூற்றாண்டில் பிரித்தானியர் பர்மாவை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தன. 1937வரை பர்மா இந்திய சாம்ராஜ்யத்துடன் இணைத்து ஆளப்பட்டு வந்தது.

1937க்குப் பின்னர் பர்மா தனியாகப் பிரிக்கப்பட்டு ஒரு தனிநாடாக பிரித்தானியர் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்து இருந்தனர். 1941ல் ஜப்பான் பர்மாவைக் கைப்பற்றி 2ம் உலக மகாயுத்தத்தில் ஜப்பான்

தோல்வி அடையும் வரை பர்மா அதன் ஆளுகையின் கீழ் இருந்தது. இதன் பின் 1948ம் ஆண்டு தைமாதம் 4ம் திகதி பர்மா சுதந்திரக் குடியரசு ஆக்கப்பட்டது.

இத்தகைய பர்மா புவியில் ரீதியாக மலைத்தொடர்களாலும், ஆழ்கடலாலும் சூழப்பட்டு ஏனைய நாடுகளில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட நாடாகக் காணப்படுகின்றது. பர்மாவில் ஆரம்பத்தில் ஜனநாயக ஆட்சி நடைபெற்றாலும் 1960இன் பின் பர்மா இராணுவ ஆட்சிக்குட்படுத்தப்பட்ட நாடாக எழுச்சிபெற்றது. இந்நிலையில் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடியவர்தான் ஆங் சாங். ஆனாலும் இவரது போராட்டம் பலன் அளிக்கவில்லை. ஏனெனில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்நிலையில் 1989ல் சூகீ அரசியல் களத்தில் குதித்தார். ஜனநாயக மலர்ச்சிக்காக இராணுவத்திற்கு எதிராக குரல்கொடுத்த நிமித்தம் சிறையில் அடைக்கப்பட்டார். இதன் பிற்பாடு 20 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து சர்வதேச நாடுகளது அழுத்தத்தின் பிரகாரம் 2010ம் ஆண்டு நவம்பரில் இராணுவத்தினால் விடுதலை செய்யப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட பின்னரும் ஜனநாயக ஆட்சியின் புத்துயிர்க்கு மீண்டும் குரல்கொடுத்து இராணுவத்துடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளும் அளவிற்கு சூகியின் செயற்பாடுகள் மேம்பட்டுள்ளது. இதன் நிமித்தம் இராணுவத்தினரால் நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. தொழிற்சங்கங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் பல இனக்குழுமங்களுடன் அரசாங்கம் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்தது போன்ற நல்ல பல அம்சங்கள் உருவாகியுள்ளன. இதன்படி மியன்மாரில் ஜனநாயகத்தின் நம்பிக்கையான பிரகாச ஒளிர்வு ஆரம்பித்து வருகின்றமையானது சூகியின் போராட்ட வரலாற்றின் வெற்றியாகும்.

**ஆய்வின் நோக்கம்**

ஆய்வு என்பது மெய்யினைக் கண்டறியும் ஒரு புலமைப் பயிற்சியாகின்றது. அத்துடன் தொடர்ச்சியான தேடலையும் முன் எடுப்பதுடன் அறிவின் எல்லைகளை ஆய்வுகள் முன்நோக்கி நகர்த்திய வண்ணம் உள்ளன. ஆய்வு என்ற கல்விச்செயன்முறை அறிந்ததில் இருந்து அறியாததை நோக்கிச் செல்லும் இயக்க விசையாகின்றது. இதன் ஊடாக கண்டுபிடிப்புக்கள் நிகழ்வதுடன் புத்தாக்கங்கள் முன் வைக்கப்படுவதையும் நாம் காணமுடியும்.

இவ் ஆய்வு பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1. மியன்மாரில் எவ்வாறு இராணுவ ஆட்சி உருப்பெற்றது என்பதையும்
2. இராணுவ ஆட்சிக்கு எதிராக முதல் ஒரு பெண் ஜனநாயகவாதியான ஆங் - சாங் - சூகி எவ்வாறு குரல்கொடுத்தார் என்பது பற்றியும்
3. சூகியினுடைய சிறைவாச போராட்டத்தினூடான ஜனநாயக புத்தெளிர்பின் உருவாக்கம் பற்றியும்
4. சூகியினுடைய தலைமைத்துவம், ஆளுமை, திட்டமான நம்பிக்கை செயற்பாடு
5. சூகி எதிர்கொண்ட இராணுவ அடக்குமுறையின் தன்மைகள் .
6. சர்வதேசத்திற்கு அந்த நிலைமைகள் எடுத்துக்காட்டப்பட்ட விதம் .
7. ஒரு பாரளுமன்ற ஜனநாயக வாதியாக அவர் பலப்படுத்திக்கொண்ட விதம்.

**ஆய்வுப் பிரச்சினைகள்**

இவ் ஆய்வுக் கட்டுரையானது ஒரு இராணுவ ஆட்சி இடம்பெற்றுக்கொண்டிருக்கும் நாட்டில் ஜனநாயக புத்தெளிச்சிக்கு பக்கபலமாக போராட்டத்தினை முன்னெடுக்க ஆங் - சாங் - சூகியினுடைய செயற்பாடுகள்,சோதனைகள், சவால்கள் தொடர்பாக ஆராய்வதாக அமைகின்றது.

அந்தவகையில் 2ம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக்கொண்டு எனது ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. சூகியைப் பற்றி அறிவதற்கு பத்திரிகைச் செய்திகள் ஊடாகவே முதலில் அறிந்துகொண்டேன். பீன்னர் இணையத்தேடலை முன்னெடுக்கும்போது அநேகமாக ஆங்கிலமொழி ஊடான தகவல்கள் கிடைக்கப்பெறினும் மொழிபெயர்த்து தகவல்களை பெறக்கூடியதாக இருந்தது. அத்தோடு சூகி தொடர்பான புத்தகங்கள் பெருமளவுக்கு ஆங்கிலத்தில்தான் வெளியிடப்பட்டுள்ளது. பர்மா நாட்டுக்கு நேரடியாக சென்று தகவல்களைப் பெறுவது என்பது மிகவும் சிக்கலுக்குரிய பிரச்சினையாக இருக்கும் பட்சத்தில் ஆங் - சாங் - சூகியுடன் தொடர்பினை மேற்கொண்ட மியன்மார் நாட்டு பெண்மணியான naw Susanna Hla Hla Soe [Member of steeringcommittee, women's organizations network of Myanmar] தொடர்பினை மேற்கொண்டு தகவலைப் பெறக்கூடியதாக இருந்தது.

சூகியினுடைய போராட்ட சிறைவாழ்க்கை பற்றி விமர்சன ரீதியான பார்வை இல்லாத பட்சத்திலும் அண்மையில் சூகி பற்றிய நேர்மாறான கருத்துக்களும் ஒரு பக்கசசார்பாக செயற்படுகின்றார் என்ற

கருத்துக்கள் நிலவுவது ஒரு பிரச்சினையாக உள்ளபோதும் இவருடைய தலைமைத்துவம், ஆளுமை,மற்றும் எதிர் கொண்ட சவால்கள் என்பனவற்றை வெளிப்படுத்துவதே எனது பிரதான நோக்கமாக உள்ளது.

**ஆய்வின் முறையியல்**

முறையியல் என்பது ஆய்வின் சொற்தொகுதியைக் கூட்டுமொத்தமாக குறிப்பிடும் ஒன்றாகவே காணப்படுகின்றது. இவ் ஆய்வின் மூலம் ஒரு இராணுவ ஆட்சியில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக போராடிய பெண்மணியான ஆங் சாங் சூகியினுடைய போராட்டத்தினையும் அவருடைய அரசியலின் ஆத்மார்த்தமான ஈடுபாட்டை வெளிக்காட்ட முனைகின்றது.

ஆய்வின் நிறைவிற்கும் நம்பகத்தன்மைக்கும் தகவல்களைப் பெறுவது முக்கியமானது. முதனிலைத்தரவுகள், துணைத்தரவுகள் என்ற வகையிலேயே ஆய்வுக்கு தகவல்கள் பெறப்படுகின்றன. இவ் ஆய்வைப் பொறுத்தவரையில் முதனிலைத் தரவுகள் எனும் போது அரசியல் ஆய்வாளர்களை நேர்காண முடிந்ததோடு துணைத்தரவுகளின் மூலமும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. துணைத்தரவு என்பது ‘‘அரசுகளினால் அல்லது நிறுவனத்தால் அல்லது தனிநபரால் சேகரிக்கப்பட்ட திரட்டுக்களில் இருந்து தரவைப்பெறும் நிலையாகும். அவ் வகையில் இவ் ஆய்வானது என்.இராமகிருஷ்னன்,Peter Poham,Hannah Beech , ஆகியோர்களது கட்டுரைகள், நூல்கள்,போன்றவற்றினூடான சூகி தொடர்பான தகவல்களையும் பத்திரிகைகள், இணையத்தளங்கள்,சஞ்சிகைகள் போன்றவற்றினையும் இரண்டாம் நிலைத்தரவுகளாக பயன்படுத்தி இவ் ஆய்வினைமேற்கொள்ள முடிந்தது.

**ஆய்விற்கான கருதுகோள்**

ஓர் உண்மைக் கட்டமைப்பை நிறுவுவதற்கு அல்லது நிராகரிப்பதற்கு உதவும் ஒரு முன்னேற்பாடான படிநிலையாகக் கருதுகோள் அமையும். எல்லாவகையான ஆய்வுகளுக்கும் கருதுகோள் அடிப்படையானதாக உள்ளது. இக் கருதுகோளானது பல்வேறு சோதனைகளுக்குட்படுத்தி அதன் உண்மைத்தன்மை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படாது கூற்று மட்டுமே எதிர்காலத்தில் உண்மையென நிரூபிக்கப்படக்கூடிய அல்லது மறுக்கப்படக்கூடிய கூற்றாக அமையப்பெறும். அந்தவகையில் எனது ஆய்வின் கருதுகோளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

- ஒரு இராணுவ ஆட்சியில் ஜனநாயக ஆட்சியை நிலைநாட்ட வேண்டியதன் அவசியம்.
- ஒரு பெண்மணி ஜனநாயகத்தின் ஆட்சி மலர எவ்வாறுபோராட வேண்டும்.
- ஜனநாயக வாதிகளுக்கு முன்னுதாரணமாக சூகி விளங்குகின்றார்.

போன்றவற்றை எனது ஆய்வின் கருதுகோளாக முன்வைக்கின்றேன்.

**ஆய்வு மூலங்கள் (இலக்கிய மீளாய்வு)**

ஒரு ஆய்வானது சிறப்பாகவும் முழுமையானதாகவும் ஆய்வு விடயம் தொடர்பான ஒரு விரிவானதும் ஆழமானதுமான ஒரு கற்பித்தலினை ஆய்வாளன் கொண்டிருப்பது அவசியம். இதற்காக குறித்த ஆய்வு சம்பந்தமாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பற்றியும் ஆய்வுடன் தொடர்புடைய ஏனைய நூல்கள் பற்றியும் ஆய்வுடன் தொடர்புடைய ஏனைய நூல்கள் பற்றியும் மீளாய்வு செய்வதுடன் அவ்வகையான ஆய்வு கொண்டுள்ள முக்கியத்துவத்தினையும் தார்ப்பரியதினையயும் அறிந்துகொள்வது பொருத்தமானது. எனது ஆய்வினை முன்னெடுத்துச் செய்வதற்கு பின்வரும் இலக்கியங்கள் மிகவும் முக்கியமானவையாக திகழ்கின்றன.

- Peter Poham இனால் 2012இல் வெளியான‘‘The lady and the peacock-the life of Aung San Suu Kyi of Burma’’இந்நூலில் சூகியின் போராட்ட வாழ்க்கைப்படிநிலைகளையும் இராணுவ அடக்குமுறை செயற்பாடுகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.
- ராமகிருஷ்ணன்.என் ‘’புயலின் பெயர் சூகீ’’ எனும் நூலில் சூகியின் ஜனநாயக வழிப்போரட்டங்களையும் அப் போராட்டங்கள் எவ்வாறு சர்வதேசத்திற்கு சூகியினால் வெளிக்காட்டப்பட்டது தொடர்பான வெளியீடாக இது அமைகின்றது. இவ் எழுத்தாளனது மற்றய படைப்பான ’’பர்மாவின் ஜனநாயக போராளி ஆங் சான் சுய் குய்’’ என்ற நூலிலும் சூகியின் அரசியல் வரலாற்றுப் பார்வையினை எடுத்துக் காட்டுகின்றது.
- Hannah Beech ,dJ The Lady walks Free Again 2012 என்ற நூலில் சூகியின் சிறை வாழ்க்கை துன்ப துயரங்களையும் விடுதலையின் பிற்பாடு சூகியின் சமாதான செயற்பாடுகளையும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- Alan.Clement 2008 “The Voice Of Hope Aung San Suu Kyi” என்னும் நூலானது சூகியின் ஜனநாயகத்துக்கான போரட்டங்குளும் அவரது பிரசித்தமான பேச்சுக்களான ‘‘அச்சத்திலிருந்து விடுதலை’’,‘‘ ஜனநாயகத்தை தேடி’’போன்றவற்றினை மேற்கொண்டு மக்களை ஒன்றிணைத்த நடவடிக்கையினை தெளிவாக புலப்படுத்துகின்றது.

- ஆங் சாங் சூகியின் ஜனநாயகப் போராட்டங்கள் பற்றிய வெளிப்படுத்தல்களாக TIME சஞ்சிகையில்2010 இல் வெளிவந்த "The Lady walks Free Again". HIMALSouth Asian சஞ்சிகையில் "Burma's dash for off share cash"என்ற தலைப்பிலும் மியன்மாரில் 2010 நிலவிய அரசியல் ஸ்திரமற்ற போக்கினை எடுத்துக் காட்டுகின்றது.

**ஆய்வின் முக்கியத்துவம்**

மியன்மார் ஒரு இராணுவ ஆட்சியின் கீழ் செயற்படும் நாடாகும். இராணுவ ஆட்சி தகர்த்தெறியப்பட்டு ஜனநாயகம் மிளிர வேண்டும் என போராடிய சூகியினுடைய திடமான நம்பிக்கை, ஆளுமை அத்தோடு ஒரு பெண்மணியால் எதுவுமே சாதிக்க முடியும் என்பதனை அகிம்சை போராட்ட வழியில் மேற்கொண்ட செயற்பாட்டினை வெளிப்படுத்துவதும் ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக இவ் ஜனநாயக போராட்டத்தின் அவசியத்தினை எடுத்துக்காட்டுவதுமே இவ் ஆய்வின் முக்கியத்துவமாகும்.

**Details of Aung San Suu Kyi**

Aung San Suu Kyi AC is a Burmese opposition politician and chairperson of the National League for Democracy in Burma. In the 1990 general election, the NLD won 59% of the national votes and 81% of the seats in Parliament.

| | |
|---|---|
| **Born** | : 19 June 1945.Rangoon. |
| **PoliticalParty** | : National League for Democracy. |
| **Spouse** | : Michal Aris(1971-1999) |
| **Relations** | : Aung San (Father & Former leader of Burma), Kyin Kyi(Mother) |
| **Alma Mater** | : University of Delhi, Oxford, SOAS |
| **Religion** | : Theravada Buddhism |
| **Awards** | : Nobel Peace Prize, Sakharov Prize, International Simón Bolívar Prize, Presidential Medal of Freedom, Congressional Gold Medal, Jawaharlal Nehru Award for International Understanding, Thorolf RaftoMemorial Prize, MTV Europe Music Free Your Mind Award, Olof Palme Prize,Bhagwan Mahavir World Peace, Wallenberg Medal, Freedom of Dublin City |
| **House arrest Periods**: | *first placed under house arrest in July 1989.* she was again imprisoned in 2000. *She was again house arrest -2003, 2009.* She was released on the 13th November 2010 |

**ஆங் சாங் சூகியின் ஜனநாயகப் போரட்டத்திற்கான உந்துதல்கள்**

- சூகியின் தந்தையான ஆங் சாங்கினுடைய அரசியல் பங்களிப்பு.
- சூகியின் தாயின் வலுவூட்டல்கள்.
- பெருமளவிலான மக்களின் ஆதரவு.
- பர்மிய மக்களுக்கு இராணுவத்தினரால் மேற்கொண்ட அடக்குமுறைகள் மற்றும் கொடுரங்கள்.
- மியன்மாரின் இரு இனங்களுக்கு இடையில் காணப்பட்ட மோதல்கள்.
- காந்தி வழிக்கொள்கையின் மீதான ஈடுபாடு.

**ஆங் சாங் சூகி ஜனநாயகத்தை மேற்கொள்வதில் ஈடுபட்ட பங்களிப்புக்கள்**

- மக்களாட்சிக்கான தேசிய லீக் என்ற கட்சியை நிறுவியமை.
- சர்வதேச மன்னிப்புச் சபையின் உதவியை நாடி பெற்றுக்கொண்டமை.
- ஜனநாயகத்துக்கான தேசிய கழகத்தின் செயற்பாடுகளை மக்கள் தொடர்பு ஊடகத்தின் மூலம் தெரிவுபடுத்தியமை.
- ஜனநாயக போராளிகளுக்கான நினைவுக் கூட்டங்களை தொடர்ந்து நடாத்த உதவியமை.
- தியாகிகள் தினத்தை அனுஷ்டித்தமை.

**ஆங் சாங் சூகி எதிர் கொண்ட சவால்கள்**

- வீட்டுக்காவலில் வைக்கப்பட்டமை.
- இராணுவ ஆட்சியாளர்களது நிபந்தனையினை ஏற்க மறுத்தமையினால் நீண்டகால சிறைவாசம் அனுபவித்தமை.
- 1990 இல் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டிருந்தும் இராணுவத்தினரால் நிராகரிக்கப்பட்டது.

- சமாதானத்திற்கான நோபல் பரிசு 1991 இல் கிடைக்கப்பெற்றும் அதனைப் பெறுவதற்கான அனுமதி இராணுவத்தினரால் வழங்கப்படவில்லை.

எனினும் சூகியின் வாழ்க்கைக்கும் மகாத்மா காந்தியின் வாழ்க்கைக்கும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

- அரசியலையும் அறத்தையும் ஒன்று சேர்க்கிறார்கள். இருவரின் அறத்துக்கும் அடிப்படையாக இருப்பது அவர்களுடைய சமய நம்பிக்கை ஆனால் இது கோட்பாடு சார்ந்ததாக உள்ள நம்பிக்கை.
- சொல்லிலும் செயலிலும் இருவரும் அகிம்சையை முழுமையாக கடைப்பிடித்தனர்.
- மரணத்தைக் கண்டு அச்சம் கொள்ளாத முழுமையான துணிவு.
- தனிமனித வசீகரம் நகைச்சுவை உணர்ச்சி.
- இருவரும் தம் எதிர்த் தரப்பினரோடும் போட்டியாளர்களோடும் இணக்கம் காண முயற்சித்தனர்.

**ஆய்வின் முடிவுரை**

ஆசியாவின் புரட்சிப் பெண் போராளி என அழைக்கப்பட்டு வரும் சூகியின் போராட்டம் இப் பிராந்தியத்தில் மட்டுமல்லாது அனைத்து பிராந்திய நாடுகளுக்கும் முன்னுதாரணமான ஒன்றாக திகழ்கின்றது. சிறந்த தலைமைத்துவ ஆளுமை, பொதுநலன், முழுமையான தியாகம் போன்றவற்றுடன் சூகி செயற்பட்டதால் தான் அகிம்சை வழிப் போராளிகளான நெல்சன் மண்டேலா, மகாத்மா காந்தி, போன்றவர்களுடன் இணைத்து பார்க்கப்படுகின்றது. அந்தளவிற்கு இவரது போராட்டம் உன்னதமானது. ஒரு பெண் பதினைந்து வருடங்களுக்கு மேலாக சிறைவாசம் அனுபவிப்பது என்பது அதுவும் மக்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த பொதுநலவாதியாக செயற்பட்டவருக்குக் கிடைத்த பலன். அதனையும் தனது வாழ்வில் சவாலாகக் கொண்டு ஜனநாயக மலர்வுக்காகப் பாடுபட்ட உன்னத தலைவியாக போற்றப்படுகின்றார்.

மியன்மாரின் ஒப்பற்ற பெருந் தலைவியாக இந்த நூற்றாண்டின் மகத்தான வீராங்கனையாக புகழாரம் சூட்டப்படுகின்ற சூகி தனது செயற்பாடுகளை நாட்டு அரசாங்கத்துடன் இணைந்து மக்களது வாழ்க்கை நலனை மேம்படுத்தும் நோக்கிலும் பொருளாதார அபிவிருத்தி, அரசியல் ஸ்திரத்தினையும் பேணும் நோக்கில் செயற்பட வேண்டியது அவசியமாகும். அத்தோடு இனப்பிரச்சினைகள் மற்றும் மதப்பிரச்சினைகள் என்பவற்றினை சுமூகமான முறையில் கையாண்டு அதனைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும். இவை எல்லாவற்றிலும் வெற்றி பெற வேண்டுமானால் மேற்குலக குறிப்பாக அமெரிக்கா, சீனா தலையீடுகளைத் தவிர்த்து அவர்களது சுயநலப் போக்கினை உணர்ந்து ஆளும்தரப்பும், எதிர்த்தரப்பும் இணைந்து நாட்டினைக் கட்டியெழுப்பும் முயற்சியில் இறங்க வேண்டும்.

பர்மா வளம் கொழிக்கும் நாடு. அவ்வளங்களினை நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தினை சூகி சார்பானவர்களும் இராணுவமும் ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்தில் பர்மா ஒரு வளர்ச்சியடைந்த நாடாக வளர முடியும்.இல்லையேல் மேற்குலக நாடுகளது அடிமை வாழ்வினைக் கைக்கொள்ளும் இரு தரப்பினரது செயற்பாடுகளும் நீடிக்கும் பட்சத்தில் இன ரீதியான மத ரீதியான பிரச்சினைகளும் முடிவுக்கு வராது. சூகியின் நீண்ட நாள் போராட்டத்தின் பலனையும் எட்டமுடியாது. ஆகவே இரு தரப்பும் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டியது பர்மாவின் தற்போதய நிலமைக்கு மிகவும் அவசியமாகும்.

**உசாத்துணைகள்:**


"Aung San Suu Kyi – A Biography." Nobel e-Museum. 27 May 2004. The Nobel

"Aung San Suu Kyi. (2014). The Biography.com website. Retrieved 05:34, Jul 12, 2014", fromhttp://www.biography.com/people/aung-san-suu-kyi-9192617

"Aung San Suu Kyi"

"Myanmar." Encyclopedia.com. 28 May 2004. 28 May 2004.

A compelling narrative of journalist Barbara Victor's visit to Myanmar/Burma and her Encounters with the military government and the Burmese people.

Aung san suukyi, (2008)"The Voice Of Hope Conversation", Rider Revised and updated edition,.

Aung.H, "The Politics of boy cot"t, HIMAL SOUTH ASIAN, Vol – 23, No – 5, 2010 may.en.wikipedia.org/wiki/Aung-san-suu-kyiFoundation. 28 May 2004.

HANNAH BEECH, "The lady walks free again", TIME, vo – 176, No – 22, 2010 Novem – 29.

http://www.encyclopedia.com/html/M/Myanmar.asp

http://www.nobel.se/peace/laureates/1991/kyi-bio.html

Jared Bissinger, “Burma’s dashfor off share cash”, HIMAL SOUTH ASIAN, Vo – 23, No – 9, 2010sep 11.

Peter popham.(2012),“The lady and peacock the life of Aung san suukyi of Burma”, rider London,.

Pravda online Aung San Suu Kyi should lead Myanmar: The World wants to restraint from the Myanmar authorities, and opposition leader Aung San Suu Kyi should take her place as elected leader, British Foreign Secretary David Miliband said Tuesday. 29 September 2007.

Victor, Barbara. (1998), “The Lady: Aung San Suu Kyi; Nobel Laureate and Burma’s Prisoner”. Boston: Faber and Faber,

“ஆங்சாங்சூகீ, அச்சத்திலிருந்துவிடுதலை”, மாற்றுக்கருத்தின் மதிப்பு,(1995) ஜனநாயகஉரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம்,.

ராமகிருஷ்ணன்.N, “புயலின்பெயர் சூகீ,தினக்குரல”, ஜனவரி 10 –பெப்ரவரி 09 2011.